# தேவாரங்களில் வீரட்டேசுவரர்கோயில்

ச.சாந்தி / S.Santhi*
வரலாற்றுத் துறை / Department of History
அழகப்பா பல்கலைக்கழகம், காரைக்குடி / Alagappa University, Karaikudi
drbsr178alu@gmail.com

Manuscript received 17 April 2021
Manuscript accepted 10 June 2021
*Corresponding author/First Author

## Abstract
In Tamil Nadu, devotional literature from the 6th century AD to the 9th century AD was developed by 63 Nayanmars and 12 Alvars based on the Shaiva and Vaishnava religions. Through these times, temples all over Tamil Nadu emerged as places of worship. It is noteworthy that Thirunavukkarasar sang Thevara songs in the temples of Thondaimandalam and Cholamandalam and Thirugnasambandar and Sundara in the temples in Cholamandalam and Pandya regions. It can be said that not only the history is compiled with the findings of the literature collected in the temples, the Inscriptions and the Copper Plates, but also the chronology of the temples with the artistic structures of the time. In this regard, the Veeratteswarar Temple is located in Thirukurukkai, a small village in the Mayiladuthurai circle of the Nagapattinam district. The history of the temple is explained by compiling the Thevara literature of the Thirukurukkai Veeratteswarar Temple, one of the places where Thevaram was sung by Thirunavukkarasar.

**Keywords:** Thevaram, Thirunavukarasar, Thiruyanasambandar, Sundarar, Temple, Veerattesuvarar, Thirukurukkai.

**ஆய்வுச்சாரம்**
தமிழகத்தில் கி.பி.6ம் நூற்றாண்டு முதல் கி.பி.9ம் நூற்றாண்டு வரை பக்தி இலக்கியங்கள் சைவ, வைணவச் சமயங்களின் அடிப்படையில் 63 நாயன்மார்களாலும், 12 ஆழ்வார்களாலும் வளர்ச்சியடைந்தன. இச்சமயங்களின் மூலம் தமிழகமெங்கும் கோயில்கள் தேவாரப்பாடல் பெற்ற தலங்களாக**த்** தோற்றமடைந்தன. இவற்றுள் திருநாவுக்கரசர் தொண்டைமண்டலம் மற்றும் சோழமண்டலக் கோயில்களிலும், திருஞானசம்பந்தரும், சுந்தரரும் சோழமண்டலம் மற்றும் பாண்டிய மண்டலங்களிலுள்ள கோயில்களிலும் தேவாரப் பாடல்களைப் பாடியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இவற்றுள் திருகுறுக்கை என்னுமிடத்திலுள்ள வீரட்டேசுவரர்கோயில் திருநாவுக்கரசரால் தேவாரப் பாடல்பாடப்பெற்ற கோயில் என்பதைத் தேவாரங்களில் வீரட்டேசுவரர் கோயில் என்னும் தலைப்பில் இலக்கியத் தரவுகளின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு விளக்கப்படுகின்றன.

**குறிச்சொற்கள்**: தேவாரம், திருநாவுக்கரசர், திருஞானசம்பந்தர், சுந்தர், கோவில்கள், வீரட்டேசுவரர்

**முன்னுரை**

தமிழகத்தில் தேவாரம் என்னும் பக்தி இலக்கியமானது சைவசமயக் கடவுளான சிவன் மீதிருக்கும் பக்திமார்க்கத்தின் மையப்பொருளாகப் பாடப்பெற்ற பன்னிருதிருமுறைகளில் முதல் ஏழு திருமுறைகள் திருஞானசம்பந்தர், திருநாவுக்கரசர், சுந்தரர் என்னும் மூவரால் பாடப்பட்ட திருமுறைகள் ஆகும். இதில் முதலில் திருநாவுக்கரசர் பாடியது தேவாரம், சம்பந்தர் பாடியது திருக்கடைக்காப்பு, சுந்தரர் பாடியது திருப்பாட்டு எனக் குறிப்பிடப்பெறுகின்றது. இம்மூவருள் திருநாவுக்கரசரால் தேவாரம்

பாடப்பெற்ற தலங்களுள் ஒன்றான திருக்குறுக்கை வீரட்டேசுவரர் கோயிலின் தேவார இலக்கியங்களைத் தொகுத்து இக்கோயிலின் வரலாற்றைப் பற்றி விளக்கப்படுகின்றன.

கோயில்களில் சேகரிக்கப்படும் இலக்கியங்கள், கல்வெட்டுக்கள், செப்பேடுகள் போன்ற சான்றுகளின் மூலம் கண்டறியப்படும் செய்திகளைக் கொண்டு வரலாறானது தொகுப்படுவது மட்டும் அல்லாமல் எக்காலத்தைச் சேர்ந்த கோயில் என்பதைப் பற்றியும் கோயில்களின் கலை அமைப்புகளைக் கொண்டு காலத்தை நிர்ணயம் செய்வது ஒருவிதச்சான்றாக அமைகிறது என்றே கூறலாம். இதனடிப்படையில் நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டத்தில் உள்ள குக்கிராமமான திருக்குறுக்கை என்னும் ஊரில் காவிரியின் வடகறைதலங்களில் 26-வதுதலமாக அட்டவீரட்ட தலங்களுள் ஒன்றாகத் திருநாவுகரசரால் தேவாரப்பாடல் பெற்றதலமாக வீரட்டேசுவரர்கோயில் அமையப்பெற்றுள்ளது.

திருக்குறுக்கை வீரடேசுவரர் கோயில் மேற்குதிசையை நோக்கிய கோயிலாக அமையப்பெற்றுள்ளது. இவ்வூர் மாயிலாடுதுறை வட்டத்தில் இருந்து மணல்மேடு செல்லும் சாலையில் 12கி.மீ தொலைவிலும், நீடூரிலிருந்தும் கொண்டல் என்னும் ஊரிலிருந்தும் 3கி.மீ தொலைவிலும் இவ்வூர் அமைந்துள்ளது. இவ்வூருக்கு**ச்** செல்வதற்கு நகரப்பேருந்து வசதிகளும் உள்ளன. மேலும் இக்கோயில் அமைந்துள்ள திருக்குறுக்கையின் எல்லைகளாக வடக்குப்புறத்தில் பட்டவர்த்தி எனும் கிராமமும், தெற்குப்புறத்தில் நீடூர் எனும் கிராமமும் கிழக்குப்புறத்தில் பாலக்குடி எனும் கிராமமும், மேற்குப்புறத்தில் ஐவநல்லூர் எனும் கிராமமும் இவ்வூரின் எல்லைகளாக அமையப்பெற்றுள்ளன. இவ்வூர் காவிரியின் வடகறையில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தலப்புராணங்களின் அடிப்படையில் இவ்வூரைப் பற்றிய தரவுகளைச் சேகரிக்கும் பொழுது தீர்க்கவாகு முனிவர் இக்கோயிலின் இறைவனை அபிஷேகம் செய்வதற்காக, தம் நீண்ட கரங்களால் ஆகாயகங்கையின் நீரை எடுத்துவருவதற்கு கரங்களை நீட்டிய போது முனிவரின் நீண்ட கரங்கள் குறுகியதால் குறுக்கை என்னும் பெயர் பெற்றுள்ளது. மேலும் இக்கோயிலை இறைவனுக்கு வீரம் வந்த தலமாகவும் மற்றும் அட்டவீரட்ட தலங்களில் காமனை நெற்றிக்கண் விழியில் அழித்த தலமாகவும் குறிக்கப்படுகின்றது. இக்கோயிலில் தலவிருட்சமாக கடுக்காய்மரம் காணப்படுவதால் கடுகவனம் என்றும், இறைவன் அம்பிகையைப் பிரிந்த தலமாதலின் யோகேஸபுரம் என்றும், இலக்குமியின் நடுக்கத்தைப் போக்கியதனால் கம்பகரபுரம் என்றும், காமதகனபுரம் என்றும், மன்மதனை மீண்டும் உயிர்ப்பித்ததால் ரதி அனுக்கிரகபுரம் என்றும் அழைக்கப்படுகின்றது.

சங்ககால இலக்கியங்களில் குறுக்கை என்றும், பக்தி இலக்கியங்களில் திருக்குறுக்கை என்றும், கல்வெட்டுகளில் விருதுராஜப்பயங்கர வளநாட்டில் காவிரியின் வடகறையின் உட்பிரிவான குறுக்கைநாடு என்றும், குறுக்கைநாட்டு கடலங்குடியான கங்கைகொண்டசோழ சதுர்வேதி மங்கலம் என்றும், குறுக்கை நாட்டினுள் ராஜநாராயண சதுர்வேதிமங்கலம், விக்கிரமச்சோழ சதுர்வேதிமங்கலம் என்றும் குறிப்பிடப்படுகின்றன. பிறஊர் கல்வெட்டுகளில் வடகறை குறுக்கைநாட்டு திருவேல்விகுடி என்னும் செய்திகளும் காணக்கிடக்கின்றன. தற்போது இவ்வூர் திருக்குறுக்கையில் இருந்து பெயர்மருவி கொற்கை மற்றும் திருக்கொற்கை எனும் பெயரில் அழைக்கப்பட்டு வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## திருநாவுக்கரசர்

திருநாவுக்கரசர் தேவாரப்பாடல் பெற்ற மூவருள் ஒருவராவார். திருவாமூரில் புகழனாருக்கும், மாதினியாருக்கும் மகனாகத் தோன்றினார். எண்பத்திஓராண்டு காலம் வாழ்ந்த நாவுக்கரசர் தேவாரப் பாக்களாக 313 பதிகங்களையும், 3066 பாடல்களையும் பாடியுள்ளார். இத்திருநாவுக்கரசரின் காலத்தைப் பற்றி சில ஆசிரியரின் கருத்துக்களாக ஔவை துரைச்சாமிப்பிள்ளை என்பவர் திருஞானசம்பந்தருக்கு முந்தியவர் என்றும், கி.பி650-651ம் ஆண்டு சித்திரைத் திங்கள் சதயநாளில் திருப்புகலூரில் உயிர்நீத்தார் என்றும், தணிகாசல முதலியார் கி.பி.5ம் நூற்றாண்டைச் சேர்ந்தவரென்றும், சீனிவாசப்பிள்ளை கி.பி.650 காலத்தவர் என்றும், கா.சுப்பிரமணியபிள்ளை என்பவர் கி.பி.580க்கும் 660க்கும் இடைப்பட்டவரென்றும், வெள்ளைவாரணார் கி.பி.7ம் நூற்றாண்டைச் சேர்ந்தவரென்றும் குறிப்பிடுகின்றனர் (ஔவை.துரைசாமிப்பிள்ளை, 2012). இவர்களுள் வெள்ளைவாரனாரின் கூற்று ஏற்புடையதாக உள்ளன என அறிவுடைநம்பி தம் நூலில் குறிப்பிட்டுள்ளார் (அறிவுடைநம்பி, 1986). இவ்வாறு திருநாவுக்கரசரின்

காலத்தைப் பற்றி இன்றும் ஆசிரியர்களிடம் கருத்து விவாதங்கள் தோற்றம் கண்டவாறு காணப்படுகின்றன. இவரால் தேவாரப்பாடல் பெற்ற சைவக் கோயில்களுள் ஆய்விற்குட்பட்டுள்ள திருக்குறுக்கையும் ஒன்றாகும். இக்கோயிலைப் பற்றிய பாடல்களை 49-வது பதிகத்தில் ஒன்று முதல் பத்துப் பாடல்களையும் 59வது பதிகத்தில் ஒன்று முதல் இரண்டாவது பாடல்களையும் பாடியுள்ளார்.

ஆதியிற் பிரம னார்தாம்
அர்ச்சித்தார் அடியி ணைக்கீழ்
ஒதிய வேத நாவர்
உணருமாறு உணர லுற்றார்
சோதியுள் கடராய்த் தோன்றிச்
சொல்லினை இறந்தார் பல்பூக்
கோதிவண்டு அறையும் சோலைக்
குறுக்கைவீ ரட்ட னாரே (திருமுறை,476)

நந்தவனத் தோட்டத்தின் பூக்களில் வண்டுகளின் சத்தம் இசை பாடுவதைப் போல உரைக்கும் இடத்தில் அமர்ந்துள்ள குறுக்கை வீரட்டேசுவரர் என்றும், நான்கு வேதங்களை உள்ளுணர்ந்த பிரம்மன் சிவபெருமானுக்கு மலர்களைத் தூவி பூசைசெய்து வழிபட்டார் என்றும் குறிப்பிடுகின்றார்.

நீற்றினை நிறையப் பூசி
நித்தலும் நியமம் செய்து
ஆற்றுநீர் பூரித் தாட்டும்
அந்தன னாரைக் கொல்வான்
சாற்றுநாள் அற்றதென்று
தருமரா சற்காய் வந்த
கூற்றினைக் குமைப்பர் போலும்
குறுக்கை வீரட்டனாரே (திருமுறை, 477)

இக்கோயிலில் மார்கண்டேயர் தம் நெற்றியில் திருநீற்றைப் பூசிக்கொண்டு சிவபெருமானைத் தினமும் காலையில் தூயநீரால் திருமஞ்சனம் செய்து வணங்கிவந்தார். ஒருநாள் சிவபூஜையில் எமன் தனது கடமையைச் செய்வதற்காக மார்க்கண்டேயனின் மீது பாசக்கயிற்றை வீசினார். இதனைக் கண்ட மார்க்கண்டேயர் பயந்தவாறு சிவலிங்கத்தைத் தழுவிக்கொள்ளவே எமனால் வீசப்பட்ட பாசக்கயிறு சிவலிங்கத்தின் மீது விழுந்து விட சிவபெருமான் லிங்கத்தைப்பிளந்து கொண்டு வெளிப்பட்டு தம் இடதுகாலால் எமனை உதைத்து அழித்த குறுக்கை வீரட்டேசுவரர் எனவும் குறிப்பிடுகின்றது.

தழைத்தோர்ஆத்தியின்கீழ்
தாபரம்மணலாற்கூப்பி
அழைத்தங்கேஆவின்பாலைக்
கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன்தாதைதாளைப்
பெருங்கொடுமழுவால்வீசக்
குழைத்ததோர்அமுதம்ஈந்தார்
குறுக்கைவீரட்டனாரே (திருமுறை, 478)

விசாரசர்மன் ஆத்திமரத்தின் நிழலில் மணலால் சிவலிங்கத்தைச் செய்து பசுவின் பாலால் அபிஷேகம் செய்ததைக்கண்ட விசாரசர்மனின் தந்தை யக்ஞோதத்தன் கோபம் கொண்டு மதியாமல் லிங்கத்தைத் தம் காலால் உதைத்தார். இதனைக் கண்ட விசாரசர்மன் தந்தையின் காலை வெட்டி வீழ்த்தினார். இதனைக் கண்டு சிவபெருமான் விசாரசர்மனின் பக்தி நெறியை பாராட்டி சண்டேசுவரர் எனப் பெயர் பெறச் செய்தார் குறுக்கை வீரட்டனாரே எனவும் குறிப்பிடுகின்றார்.

சிலந்தியும் ஆனைக் காவில்
திருநிழல் பந்தர் செய்து
உலர்ந்தவள் இறந்த போதே
கோட்செங்குணாமாகக்
கலந்தநீர்க் காவிரி சூழ்
சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனிற் பிறப்பித்திட்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே (திருமுறை, 479)

திருவானைக்கா என்னும் தலத்தில் உள்ள சிலந்தியானது சிவபெருமானின் மீது சூரிய ஒளிபடாமல் நிழல் தருவதைப் போல தனது உமிழ் நீரால் நிழல் அமைத்தது. அச்சிலந்தியானது சில நாட்களில் இறந்துவிடவே சிவபெருமான் கோசெங்கச்சோழனாக பூலோகத்தில் பிறப்பெடுக்க என அருளிய குறுக்கை வீரட்டனாரே என்றும் குறிப்பிடுகின்றார்.

ஏறுடன் ஏழ டர்த்தான்
எண்ணி ஆயிரம்பூக் கொண்டு
ஆறுடைச் சடையி னானை
அர்ச்சித்தனர் அடிய ணைக்கீழ்
வேறுமோர் பூக்கு றைய
மெய்ம்மலர்க் கண்ணை ஈண்டக்
கூறுமோர் ஆழி யீந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே (திருமுறை, 480)

விஷ்ணு சிவபெருமானுக்கு ஆயிரம் தாமரை மலர்களால் பூசை செய்யும்போது தான் வைத்திருந்த ஒரு மலர் குறைந்ததும் உடனே விஷ்ணு த(னது)**ம்** உடம்பில் செந்தாமரைமலரைப் போன்ற தம் கண்மலரால் பூசை செய்தார். இதனைக் கண்ட சிவபெருமான் விஷ்ணுவுக்கு**ப்** போர்க்காலங்களில் உதவுமாறு சக்கராயுதத்தைக் கொடுத்து அருள்புரிந்த குறுக்கை வீரட்டானரே என்றும் குறிப்பிடுகின்றார்.

கல்லினால் எறிந்து கஞ்சி
தாமுனும் சாக்கி யனார்
நெல்லினார் சோறு ணாமே
நீள்விசும்பு ஆள வைத்தார்
எல்லியாங்கு எரிகை யேந்தி
எழில் திகழ் நட்டம் ஆடிக்
கொல்லியாம் பண்ணு கந்தார்
குறுக்கைவீ ரட்ட னாரே (திருமுறை, 481)

சாக்கிய நாயனார் உணவு உண்டதற்கு முன் தவறாமல் சிவபூசை செய்தவர். சிவனுக்குப் பூசை செய்யும் போது கல்லெறிந்து வழிபாடு செய்தார். இதனைச் சிவபெருமான் மனமகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்ட சிவன் கஞ்சியை உண்ணும் நாயனாருக்கு நெற்சோறும், அமிர்தமும், அருந்துமாறு செய்து முக்திப் பேற்றினைக் கொடுத்துக் கரங்களில் அக்னி ஏந்தி நடனம் புரிந்த குறுக்கை வீரட்டனாரே என்றும் குறிப்பிடுகின்றார்.

காப்பதோர் வில்லும் அம்பும்
கையதோர் இறைச்சிப் பாரம்
தோற்பெரும் செருப்புத் தொட்டுத்
தூயவாய்க கலசம் ஆட்டித்
தீப்பெருங் கண்கள் செய்ய
குருதிநீர் ஒழுக்கத் தன்கண்
கோப்பதும் பற்றிக் கொண்டார்
குறுக்கைவீ ரட்ட னாரே (திருமுறை, 482)

கண்ணப்பநாயனார் ஒருகையில் வில்லும் அம்பும் கொண்டு மற்றொரு கரத்தில் மாமிசத்தைத் தாங்கியும், காலில்தோல் பாதுகையோடும், உமிழ்நீரால் சிவனைப் பூசித்துக் காவல்காத்த பொழுது சிவனின் முகத்தில் ஒருகண் குருதி கொட்டுவதை அதிர்ச்சியோடு பார்த்த கண்ணப்பனார் தம் கண்ணை எடுத்துச் சிவனின் முகத்தில் குருதி வருவதைத் தடுத்துக் கண்ணைப் பொருத்தினார். இவ்வாறு கண்ணப்பரின் பக்திநெறியைச் சோதித்த குறுக்கை வீரட்டனாரே என்றும் குறிப்பிடுகின்றார்.

நிறைமறைக் காடு தன்னில்
நீண்டெரி தீபம்தன்னைக்
கறைநிறத்து எலிதன் மூக்குச்
சுட்டிடக் கனன்று தூண்ட
நிறைகடல் மண்ணும் விண்ணும்
நீண்டான் உலகம் எல்லாம்
குறைவறக் கொடுப்பார் போலும்
குறுக்கைவீ ரட்ட னாரே (திருமுறை, 483)

மகாசிவராத்திரியன்று எலிக்கு முக்தியளித்து மாவளி வேந்தனாக மனிதப்பிறவி எடுத்ததும், தீச்சுடர் போல் எரியும் விளக்கிலிருந்து சப்தத்துடன் தோன்றிய சிவபெருமானைக் கண்டு மகிழ்ந்த மக்களின் குறுக்கை வீரட்டனாரே என்றும் குறிப்பிடுகின்றார்.

அணங்குமை பாக மாக
அடங்கிய ஆதி மூர்த்தி
வணங்குவார் இடர்கள் தீர்க்கும்
மருந்துநல் லருந்த வத்தி
கணம்புல்லார்க்கு அருள்கள் செய்து
காதலாம் அடியாருக்கு என்றும்
குணங்களைக் கொடுப்பர் போலும்
குறுக்கைவீ ரட்ட னாரே (திருமுறை, 484)

சிவன் ஒரு பகுதி உமையாகவும் மற்றொரு பகுதி சிவபெருமானாகவும் அடியவர்களின் துன்பங்களைத் தீர்ப்பவராகவும், சத்துவ குணங்களையும் சிவனின் மெய்யடியார்களுக்குக் கொடுப்பவரே குறுக்கை வீரட்டனார் என்றும் குறிப்பிடுகின்றார்.

எடுத்தனன் எழிற் கயிலை
இலங்கையர் மன்னன் றன்னை
அடுத்தொரு விரலால் ஊன்ற
அலறிப்போல் அவனும் வீழந்து
விடுத்தனன் கைந ரம்பால்
வேதகீ தங்கள் பாடக்

கொடுத்தனர் கொற்றவர் வாணாள்
குறுக்கைவீ ரட்ட னாரே (திருமுறை, 485)

இராவணன் சிவனை நோக்கி ஆயிரம் ஆண்டுகள் தவம் செய்து நான்குமறைகளை இசைக்கவும், அரசாட்சி செய்யவும் அருள்புரிந்தவர் குறுக்கை வீரட்டனாரே என்றும் குறிப்பிடுகின்றார்.

நெடியமால் பிரமனோடு நீரெனும் பிலயங் கொள்ள
அடியொடு முடியும் காணார் அருச்சுனற்கு அம்பும் வில்லும்
துடியுடை வேடராகித் தூயமந்திரங்கள் சொல்லிக்
கொடுநெடுந்தேர்கொடுத்தார் குறுக்கைவீரட்ட னாரே
(திருமுறை, 486)

இலிங்கோத்பவரின் புராண நிகழ்வைக் குறிப்பிட்டு திருமாலையும் பிரம்மாவையும் பற்றித் திருநாவுக்கரசர் பாடியதோடு, அர்ச்சுனர்க்கு வில்லு, அம்பு, பாசுபத அஸ்திரம் கொடுத்தவர் குறுக்கை வீரட்டனாரே என்றும் பாடியுள்ளார் இத்தேவாரப்பாடல் 59ம் பதிகத்தில் இடம்பெற்றுள்ளது.

ஆத்தமாம் அயனும் மாலும் அன்றிமற் றொழிந்த தேவர்
சோத்தம் எம் பெருமான் என்று தொழுது தோத்திரங்கள்
சொல்லத் தீர்த்தமாம் அட்டமீமுன் சீருடை ஏழுநாளும்
கூத்தராய் வீதிபோந்தார் குறுக்கைவீரட்ட னாரே (திருமுறை, 487)

காமனை அளித்த புராணக்கதையோடு சிவன் சக்தியோடு இணைந்து காமனை அழித்த இடமே திருகுறுக்கை வீரட்டனாரே என்றும் திருநாவுக்கரசரால் பாடப்பெற்ற திருக்குறுக்கை என்பது குறிப்பிடத்தக்கது.

**முடிவுரை**

நாகப்பட்டினம் மாவட்டம் மயிலாடுதுறை வட்டத்தில் காவிரியாற்றின் வடகறையில் உள்ள திருக்குறுக்கை என்னும் இவ்வூர் புராணக்காலங்களில் அட்டவீரட்டத் தலங்களுள் ஒன்றாகவும் சங்ககாலத்தில் அன்னிக்கும், திதியனுக்கும் ஏற்பட்ட போரில் அன்னிபோர்க்களத்திலே இறந்துபடவே ஓர் புன்னைமரத்தை மட்டுமே கொண்டு நடந்த புன்னைப் போர் நடந்தேறிய குறுக்கை என்னும் இவ்விடம் சிறப்புக்குரிய ஒன்றாகும். இச்சங்ககாலத்தில் மக்களால் பயன்படுத்தப்பட்ட கருப்புநிறப்பானை ஓடுகள் களப்பணியின் போது இக்குறுக்கையிலும் கிடைக்கப்பெற்றது முக்கியத்துவம் பெற்றச்சான்றாக அமைகின்றது. சங்ககாலத்தைத் தொடர்ந்து கி.பி 6ம் நூற்றாண்டில் பக்தி இயக்கத்தில் சைவ சமயத்தின் வளர்ச்சியில் பன்னிரு திருமுறைகளில் திருநாவுக்கரசரால் தேவாரப்பாடல் பெற்றதலங்களுள் ஒன்றாகத் திருக்குறுக்கையும் குறிப்பிடப்பெற்றுள்ளது. இப்பக்தி இலக்கியச்சான்றுகளின் அடிப்படையில் நோக்கும் போது திருநாவுக்கரசரின் காலத்திலிருந்தே இத்தலம் இருந்திருக்கக்கூடும் பின்னர் சோழர்களின் காலத்தில் இக்கோயில் முழுவதும் தகர்த்தப்பட்டு இச்சோழர்களின் கலைப்பாணியில் கட்டப்பட்டிருக்கலாம்.

**நூற்பட்டியல்**

*Annual Report of Epigraphy-503,504*. (1925). New Delhi: Archaeological Survey of India.
Balasubramanyam, S. R. (1971). *Early Chola Temples*. Chennai: Oriental Longman
Balasubramanyam, S. R. (1977). *Middle Chola Temples*. Amsterdam: Oriental Press.
Balasubramanyam, S. R. (1979). *Later Chola Temples*. Faridabad: Mudgala Trust.

Mahalingam.T. V. (ed.). (1988). *A Topographical list of inscriptions in Tamilnadu and Kerala States*. (Vol. II). New Delhi: Indian Council of Historical Research.

Nilakanda Sastri, K. A. (1971). *A History of South India*. Chennai: Oxford University.

Nilakanda Sastri, K. A. (1975). *The Cholas*. Chennai: University of Madras.

Santhi, S. (2020, October). Ma Manigal at the Vennar River Bank. *Shanlax International Journal of Arts Science and Humanities, 5*(2), 26-37. DOI:10.34293/tamil.v5i2.3484

Subbarayalu, Y. (1973). *Political Geography of the Chola Country*. Govt. of Tamilnadu: The state Department of Archaeology.

Subramaniyan, N. (1966). *Sangam Polity*. Madurai: Asia Publishing House.

Subramaniyan, N. (1981). *History of Tamilnadu*. Madurai: Asia Publishing House.

அறிவுடைநம்பி, மா. சா. (1986). *திருநாவுக்கரசர் தேவாரத்தில் காணப்படும் இலக்கியக் கொள்கைகள்*. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

இராசமாணிக்கனார், முர். (1999). *சோழர் சரிதம்*. சென்னை: பூரம் பதிப்பகம்.

இராமன், கே.வி. (1977). *பாண்டியர் வரலாறு*. சென்னை: தமிழ்நாடு அரசு.

ஔவை துரைசாமிபிள்ளை. (2012). *சைவ இலக்கிய வரலாறு கிபி 7 முதல் கிபி 10ம் நூற்றாண்டு வரை*. சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.

சதாசிவப்பண்டாரத்தார், தி. வை. (1974). *பிற்காலச் சோழர் வரலாறு*. சிதம்பரம்: அண்ணாமலைப் பல்கலைகழகம்.

சதாசிவப்பண்டாரத்தார், தி.வை. (2001). *பாண்டியர் வரலாறு*. சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.

சீனிவாசன், கே. ஆர். (1966). *தென்னிந்தியக் கோயில்கள்*. புதுடில்லி : நேஸனல் புக் டிரஸ்ட் ஆப் இந்தியா.

சேதுப்பிள்ளை, ரா. பி. (2008). *தமிழக ஊரும் பேரும்*. (8ஆம் பதிப்பு). பதிப்பகர்: பழனியப்பா பிரதர்ஸ்.